தயாராக இருக்கிறேன். ஆனால் 1988 ஆம் ஆண்டிலிருந்து எம்.ஜி.ஆரைக் கொலை செய்ய முயன்றது ஜானகி, தன்னைக் கொலை செய்ய ஜேப்பியார் மூலம் முயற்சித்தது, ஜானகி அம்மையார், வீரப்பன் தன் நண்பர் காரை மோதி கன்னைக் கொலை செய்ய முயன்றார் தாக்குதலுக்கு மூப்பனார்தான் காரணம் என்கின்ற இத்தனைக் குற்றச்சாட்டுகளையும், இன்றைக்குச் சொல்லப்படுகிற குற்றச்சாட்டுகளையும் சேர்த்து விசாரிக்க இந்த அரசு தயாராக இருக்கிறதுஎன்பதைத் தெரிவித்து அமைகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

திரு.எஸ்.டி. உகம்சந்த்: தலைவர் அவர்களே, ஒரு விளக்கம்..

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இதிலே விளக்கம் எல்லாம் கிடையாது. மாண்புமிகு முதல்வர் அவர்களின் விளக்கத்திற்குப் பிறகு, இதில் வாதத்திற்கு இடம் கிடையாது. உட்காருங்கள். (குறுக்கீடு). முதலில் விதிமுறைகளைப் படியுங்கள். (குறுக்கீடு) விளக்கமே கிடையாது என்று சொல்லிவிட்டேனே. மாண்புமிகு முதல்வர் அவர்களின் விளக்கத்திற்குப் பிறகு பேரவையின் இதர அலுவல்களை ஒத்திவைத்து இத்தீர்மானம் குறித்து விவாதிக்கத் தேவையில்லை என்பதால் இதற்கு இசைவு மறுக்கப்படுகிறது. (குறுக்கீடு) No further discussions. உட்காருங்கள்.

4. அறிவிப்புகள்

(அ) முன்பண மானியக் கோரிக்கைகள், 1990-91, மொழிதல் (ஆ.இ)

11–00 மணி

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு 1990-91 ஆம் ஆண்டின் செலவிற்கான முன்பண மானியக் கோரிக்கைகளை பேரவையில் முன்மொழிவது குறித்து, மேதகு ஆளுநர் அவர்களிடமிருந்து கீழ்க்கண்ட செய்தி வரப்பெற்றுள்ளது.

''In pursuance of Article 206 (2) read with Article 203 (3) of the Constitution of India I, P. C. Alexander, Governer of Tamil Nadu, hereby give my recommendation to the moving in the Tamilnadu Legislative Assembly of the Demands for Advance grants during the year 1990-91.'' (குறுக்கீடு)

3.ஒத்திவைப்புத் தீர்மானம்—தொடர்ச்சி உறுப்பினர் செல்வி ஜெயலலிதா அவர்களுக்கு மீனம்பாக்கம் அருகே ஏற்பட்ட விபத்தால் தமிழகத்தில் ஏற்பட்டுள்ள நிலைக்குறித்து—தொடர்ச்சி.

மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் ஒன்றைக் கவனிக்க வேண்டும். ஒத்திவைப்புத் தீர்மானத்திற்கு இசைவு மறுக்கப்பட்டால், அது தொடர்பாக வேறு எந்தசந்தேகத்திற்கும் இடம் இல்லை என்பதைக்கவனிக்க வேண்டும்.